**செய்தி வெளியீடு எண். 159** **நாள். 17.02.2010**

**தமிழ்நாடு அரசு**
**உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை**
**மாநில நுகர்வோர் சேவை மையம் – சனவரி 2010 மாத செயல்பாடுகள்**

நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986ன்படி, நுகர்வோர்க்கு பாதுகாப்பு உரிமை, தேர்ந்தெடுக்கும் உரிமை, விவரம் அறியும் உரிமை, முறையிடும் உரிமை, குறைதீர்க்கப் பெறும் உரிமை மற்றும் நுகர்வோர் கல்விக்கான உரிமை போன்ற அடிப்படை உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. நுகர்வோர்கள் ஒரு பொருளையோ / சேவையையோ வாங்கும் முன்பு அது தொடர்பான ஆலோசனைகள் பெறவும், சந்தேகங்கள் தீர்க்கவும், பொருள் / சேவை வாங்கிய பிறகு பிரச்சினைகள் நேரிடின் ஆலோசனை பெறவும், புகார் வழங்கவும் இந்திய அரசின் நிதி உதவியுடன் தமிழ்நாடு அரசு, **மாநில நுகர்வோர் சேவை மையத்தினை** செயல்படுத்தி வருகிறது. இதில் பொதுவான நுகர்வோர் மற்றும் பொது விநியோகத் திட்டத்தின் கீழான குடும்ப அட்டைதாரர்கள் தொடர்பு கொண்டு உதவி பெற இயலும். குடிமக்கள் கீழ்க்காணும் வசதிகளை பயன்படுத்தி நுகர்வோர் சேவை மையத்தினை தொடர்பு கொள்ளலாம். தொலைபேசி எண் 044 28592828 வாயிலாகவும் www.consumer.tn.gov.in என்ற இணைய தளம் வாயிலாகவும், consumer@tn.gov.in என்ற மின் அஞ்சல் வாயிலாகவும் ஆணையாளர் அலுவலகம், உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, எழிலகம் 4ம் தளம், சேப்பாக்கம், சென்னை 600 005 என்ற முகவரியிலும் சேவை உதவியாளர்களை **திங்கள் முதல் சனிக்கிழமை** முடிய ஆறு நாட்கள் **காலை 09.30 மணி முதல் மாலை 06.00 மணி வரை** தொடர்பு கொண்டு விவரம் பெற்று பயனுறலாம். தொடர்ந்து கண்காணிக்க வேண்டிய புகார்களில் புகார்தாரருக்கு பதில் தொலைபேசி, மின் அஞ்சல் அல்லது கடிதம் வாயிலாக தெரிவிக்கப்படும்.

நவம்பர் 2009 மாதத்தில் துவக்கப்பட்ட இம்மையத்தில் சனவரி 2010 மாதம் முடிய 6497 கோரிக்கைகள் / புகார்கள் பெறப்பட்டு அவற்றில் 5727 தீர்வு செய்யப்பட்டுள்ளன, சனவரி 2010 மாதத்தில் மட்டும் 2238 கோரிக்கைகள் / புகார்கள் பெறப்பட்டன, அவற்றில் 1949 கோரிக்கைகள் / புகார்கள் அம்மாதத்திலேயே தீர்வு செய்யபப்ட்டன. ஒரு சர்வதேச நிறுவனத்தின் குளிர் சாதன பெட்டி ஒன்றினை வாங்கிய திரு, வேணுகோபால் என்ற நுகர்வோர் அப்பெட்டி சரியாக இயங்காத நிலையில் மையத்தினை தொடர்பு கொண்ட பின்னர் அந்நுகர்வோருக்கு மையத்தின் தலையீட்டினால் புதிய குளிர் சாதன பெட்டி ஒன்று மாற்றி வழங்கப்பட்டது. இவ்வாறு பொருள் மற்றும் சேவைகளில் உள்ள குறைகள்

நுகர்வோர் உதவி மையத்தின் தலையீட்டிற்கு பின் உடனடியாக சரி செய்யப்படுவதனால் மையத்தினை தொடர்பு கொள்ளும் நுகர்வோர்கள் பெரு மகிழ்ச்சி அடைகின்றனர். மேலும் ஒரு குறிப்பிட்ட சேவை தொடர்பாக நுகர்வோர்க்கு ஆலோசனை வழங்கும் பொருட்டு சனவரி 2010 மாதம் முதல் மாதத்தின் கடைசி சனிக்கிழமையன்று குறிப்பிட்ட சேவை தொடர்பாக உதவி மைய பணிகள் வழங்கப்படுகின்றன. சனவரி 2010, 30ஆம் தேதியன்று வீடு, நிலம் மற்றும் அடுக்கு மாடி வாங்க உத்தேசித்துள்ள நுகர்வோர்க்கு சிறப்பாக ஆலோசனை சி.எம்.டி.ஏ அலுவலர், வழக்கறிஞர் மற்றும் நுகர்வோர் ஆர்வலர்கள் வாயிலாக வழங்கப்பட்டது, அவ்வமயம் 57 நுகர்வோர்கள் மையத்தினை தொடர்பு கொண்டு பயன் பெற்றனர். பிப்ரவரி 2010 மாத கடைசி சனிக்கிழமையன்று செல்பேசி உபயோகிக்கும் நுகர்வோர்களுக்கான சிறப்பு ஆலோசனை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது,. அரசின் இந்த சீர்மிகு சேவை பொதுமக்கள் மற்றும் நுகர்வோர் அமைப்புகளின் பாராட்டினை பெற்றுள்ளது. இவ்வசதிகளை பயன்படுத்தும் குடிமக்கள் இச்சேவை தொடர்பான தங்களது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் **consumer@tn.gov.in** என்ற முகவரிக்கு மின் அஞ்சல் வாயிலாகவோ அல்லது **044 – 28592255** என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டோ தெரிவிக்கலாம்.

**ஆணையாளர்.**
**உணவு பொருள் வழங்கல் மற்றும்**
**நுகர்வோர் பாதுகாப்புத் துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.**